Adulteration of Milk.

*Q. No. 594—THIRU N. KITTAPPA: will the Hon. the Minister for Rural Industries be pleased to state:

(a) whether the Bureau for Parliamentary work, Madras has written to the Deputy Inspector General of Police, Food Cell, about the adulteration of milk produced by the Tamil Nadu Dairy Devolopment Corporation during the year 1978 and 1979; and

(b) if so, the details of the action taken thereon?

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி: (அ) ஆம்.

(ஆ) இம் மனுக்கள் யாவும் தமிழ்நாடு பால்வள நிறுவனத்தினால் மயிலாப்பூரில், சித்திரக்குளம் வட்டாரத்தில் உள்ள தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் வழங்கு நிலையத்திலிருந்து வழங்கப்படும் பாலில் கலப்படம் செய்யப்படும் குறைகளைப் பற்றியதாகும். பாலில் கலப்படம் செய்யும் குற்றங்களின்மேல், சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் அவர்கள்தான் உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சோதனையிட மாதிரி பால் எடுக்க அதிகாரம் பெற்றவர்கள். ஆகவே, காவல் துறையில் இதைக் குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்க இயலாது. இந்த காரணங்களினால் இவ்விதமான மனுக்கள் வந்தால் அவற்றை சென்னை மாநகராட்சி சுகாதார அலுவலருக்கு காவல்துறை மேல் நடவடிக்கைக்காக அனுப்பி விடுகிறது. இந்த மனுக்கள் காவல் துறைக்குச் சம்பந்தமில்லையென்றாலும் இதில் கூறப்பட்ட குறைகளை நீக்க மண்டல காவல் துறை அதிகாரியினால் பால்வள நிறுவன நிர்வாக இயக்குநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அவரும் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படத்தை பொறுத்தவரையில், பாலில் இருக்கக்கூடிய கொழுப்புச் சத்தை எடுத்து விட்டு, தண்ணீர் கலந்து விற்கிறார்கள். இவ்வாறு செய்யும் வியாபாரிகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே குறிப்பிட்டபடி இதற்கென தனி அலுவலர்கள் இருக்கிறார்கள். ஆய்வில் குற்றம் என்று கண்டுபிடிக்கப்பட்டால் சட்டப்படி தண்டனைகள் வழங்கப்படுகின்றன.

1981 ஏப்ரல் 2]

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்—அவர்களே, பாலில் கலப்படம் என்பதிலே தனியார்கள் அந்த குற்றங்களைச் செய்தால் வழக்கு தொடர்வது பற்றி ஆட்சேபணை இல்லை. கூட்டுறவுப் பால் நிறுவனங்களில் விற்பதற்குப் பால் எடுத்து வருகின்றபொழுது அதிலே கலப்படம் என்று குற்றம் வந்தால், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் மீது வழக்கு போடுவது சரியாக இருக்காது. எங்கிருந்து பால் எடுத்து வரப்படுகிறதோ, அது சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் சரியாக இருக்கும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

மதுரை மாவட்டத்தில் மாம்பழச்சாறு பதனிடுதல்
தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 595—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத் துறையில் மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை மதுரை மாவட்டம் நத்தம் தாலுகாவில் அமைக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மதுரை மாவட்டத்தில் பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை கூட்டுறவு முறையில் அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் பகுதியில் ஏராளமாக மாம்பழங்கள் விளைகின்றன. வருகின்ற காலத்திலாவது மாம்பழச்சாறு பதனிடும் தொழிற்சாலையை அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த தொழிற்சாலை அமைப்பது பற்றி தொழில் வணிக இயக்குநரிடம் குறிப்பில்லை. தொழில் வணிக இயக்குநர், இத்தகைய தொழிற்சாலை மதுரை பகுதியில் நிறுவ வாய்ப்புகள் ஏதாவது இருக்கிறதா என்பதை மதுரை மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.